முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

அ.வ.எண். 84/2024

நாள். 23.01.2026 வா.சா.1 – திருமதி.ஜெயா

க/பெ - திரு.எட்வின் ஜோசப் சேவியர்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1) . உங்களுக்கு சொந்த ஊர் கண்ணன்குளம் என்றால் சரி தான். 1ம் பிரதிவாதி ஞானதாசன் என்பவருக்கும் கண்ணன்குளம் என்றால் சரி தான். நீங்கள் குடியிருக்கும் தெருவில் தான் 1ம் பிரதிவாதியும் குடியிருக்கிறார் என்றால் சரியல்ல. எங்கள் அப்பா குடியிருக்கும் தெருவில் குடியிருந்து வருகிறார். உங்களுக்கு 1ம் பிரதிவாதி தூரத்து உறவில் சொந்தக்காரர் என்றால் தெரிந்தவர் ஆவார். நீங்கள் வழக்கு தாக்கல் செய்துள்ள சொத்து 1ம் பிரதிவாதிக்குரியது என்றால் சரி தான்.

2) நீங்கள் சொத்தை எப்போது கிரையம் வாங்கினீர்கள் என்றால் 06.04.2011ல் வாங்கினேன். நீங்கள் கிரையம் வாங்குவதற்கு முன்னர் 1ம் பிரதிவாதியை விசாரித்தீர்கள் என்றால் விசாரணையும் செய்தேன். வில்லங்க சான்றிதழ் எடுத்து பார்த்தேன், அதில் எந்தத வில்லங்கமும் இ ல்லை. 1ம் பிரதிவாதியிடம் ஏதாவது வில்லங்கங்கள் இருக்கிறதா என்று நேரடியாக விசாரித்தீர்களா என்றால் விசாரித்தேன். அவர் எந்த வில்லங்கங்களும் இ ல்லை என்று கூறினார்.

JAYANDRAN ANNSRAJA Digitally signed by JAYANDRAN ANNSRAJA Date: 2026.01.23 04:24:06 +0530

3) நீங்கள் கிரையம் வாங்குவதற்கு முன்பு தபசில் சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதிக்கும் 2ம் பிரதிவாதிக்கும் இடையே 15.12.2010 ம் தேதியிட்ட பதிவு செய்யப்படாத கிரைய ஒப்பந்தம் இருப்பது உங்களுக்கு தெரியும் என்றால் சரியல்ல , எனக்கு தெரியாது. கிரைய ஒப்பந்தத்திற்கு 6 மாதத்திற்கு பின்பு தான்நீங்கள் கிரையம் வாங்கினீர்கள் என்றால் எனக்கு கிரையம் இருப்பது தெரியாது.

4) நீங்கள் வா.சா.ஆ.3 பட்டா தாக்கல் செய்துள்ளீர்கள், அது கூட்டுப்பட்டா ஆகும். அதை எத்தனை நபர்கள் வாங்கி உள்ளார்கள் என்றால் அது கூட்டு பட்டா என்று எனக்கு தெரியும், ஆனால் அதில் எத்தனை நபர்கள் பெயர்கள் உள்ளது என்று நான் எண்ணிப் பார்க்கவில்லை. நீங்கள் கிரையம் வாங்கி 14 வருடங்கள் ஆகி விட்டது என்றால் சரியல்ல். 15 வருடங்கள் ஆகி விட்டது. 15 வருடங்களாக நீங்கள் தனிப்பட்டா கோரி விண்ணப்பம் கொடுக்கவில்லை, மற்றும் தனிப்பட்டா வாங்கவில்லை என்றால் சரி தான். தீர்வை ரசீதும் போடவில்லை என்றால் சரி தான்.

5) தாவா இடத்தில் கட்டிடம் எதுவும் நீங்கள் கட்டவில்லை என்றால் சரி தான். மரங்கள் உள்ளது நாங்கள் பராமரித்து வருகிறோம். என்னென்ன மரங்கள் உள்ளது என்றால் தென்னைமரம், மற்றும் வேப்பமரம் உள்ளது. மேற்படி மரங்கள் எல்லாம் ஏற்கனவே இருந்த மரங்கள் என்றால் சரியல்ல. நாங்கள் வைத்த மரங்கள் ஆகும்.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.01.23 04:24:13 +0530

நீங்கள் வழக்கு தாக்கல் செய்துள்ள உங்கள் அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல, அனுபவத்தில் தான் உள்ளது. 2ம் பிரதிவாதியை உங்களுக்கு தெரியுமா என்றால் இன்றைக்கு அவர் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார், அதனால் எனக்கு தெரியும்.

6) 2ம் பிரதிவாதிக்கு பணகுடி சொந்த ஊர் என்றால் எனக்கு பணகுடி என்று தெரியும், அது அவரது சொந்த ஊரா என்று எனக்கு தெரியாது. கண்ணன் குளத்திற்கும், பணகுடிக்கும் 23 கி.மீ. தொலைவு இருக்கும் என்றால் சரி தான். 1ம் பிரதிவாதியும் நீங்களும் கூட்டாக சேர்ந்து 2ம் பிரதிவாதிக்கு தெரியாமல் 1ம் பிரதிவாதி உங்களுக்கு கிரையம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

7) உங்களுக்கு கிரையம் ஏற்படுத்துவதற்கு முன்பே 1ம் பிரதிவாதிக்கும், 2ம் பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்ட கிரைய ஒப்பந்த பத்திரம் பற்றி தெரிந்திருக்கிறது என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி நீதிமன்றம் வழியாக கிரைய பத்திரம் எழுதிக் கொடுத்த விவரம் எப்போது தெரியும் என்றால் 10.05.2024 அன்று தெரியும். நீங்கள் சொல்லக் கூடிய தேதி தவறு என்றும் உங்களுக்கு கிரையம் ஏற்பட்டது பற்றியும், வழக்கு பற்றியும் தெரியும் என்றால் சரியல்ல.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.01.23 04:24:19 +0530

8) உங்கள் கிரைய பத்திரத்தை ரத்து செய்ய 2ம் பிரதிவாதிக்கு உரிமை உள்ளது என்றும் அவர் எதிர் கோரிக்கை தாக்கல் செய்ய உரிமை உண்டு என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் தாக்கல் செய்துள்ள வழக்கு எந்த வகையிலும் நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. 2ம் பிரதிவாதி பெயரிலும் கூட்டுப் பட்டாவில் பெயர் உள்ளது என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. ஆகவே, இந்த வழக்கு சொத்து 2ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றும் உங்களுக்கு எந்த விதமான உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. நீங்கள் கேட்கும் பரிகாரம் உங்களுக்கு கிடைக்கக் கூடியதல்ல என்றால் சரியல்ல.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.01.23 04:24:26 +0530